(ஈ) வறிய மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் பிற உபகரணங்களையும் பாடசாலை சீருடைகளையும் வழங்குவதன் மூலமாக உதவியளித்தலும் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி மட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்குதலும் ;

(உ) கிராமிய, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களிலான மாணவர்களினதும் இளைஞர்களினதும் விளையாட்டு, இலக்கிய மற்றும் கலை போன்ற துறைகளிலான உள்ளார்ந்த திறன்களை இனங்காணல் மற்றும் அதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமாக அவர்களின் உள்ளார்ந்த திறன்களை முன்னேற்றிக்கொள்ள ஊக்குவித்தல் ;

(ஊ) பாடசாலையை விட்டுச்செல்லும் இளைஞர்களுக்காக பொருத்தமான கருத்திட்டங்களை இனங்காணவும் எதிர்கால தொழில்வாய்ப்புகளில் தோன்றுகின்ற போட்டித் தன்மைமிக்க கேள்விக்கு முகங்கொடுப்பதற் காக பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் அத்தகைய கருத்திட்டங்களை பேணிவருவதன்மூலமாக அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ;

(எ) சுயதொழிலில் ஈடுபட இயலுமான தாக்கும்பொருட்டு உள்ளார்ந்த திறன்களையும் ஆற்றல்களையும் வளர்ப்பதற்காக நிதிரீதியாகவும் வேறுவிதமாகவும் தேவைப்பாடுகள் நிலவுகின்ற பிரிவுகளுக்கான உதவி களைச் செய்தல் ;

(ஏ) வலதுகுறைந்தவர்களுக்கு அவர்களின் ஆளுமையை விருத்திசெய்து கொள்வதற்கான அனைத்துவிதமான உதவிகளைப் புரிதலும் முன்பள்ளிகள் முன்பிள்ளைப் பருவக் கல்வியுடன் தொடர்புடைய சகலவிதமான உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்;

